கருத்தைச் சொல்கிறேன். என்னுடைய கருத்தைக்கூட நீங்கள் சட்டமன்றத்திலே ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள் என்பது நிச்சயமாக

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் அவர்கள் ஒன்றைக் கருத வேண்டும். நீங்கள் கொடுத்திருப்பது தொலைக் காட்சி பற்றி. ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறீர்கள் அவர்கள் சட்டமன்றத்தில் முதல்வர் வரவு செலவுத் திட்டத்தைப் படிக்கின்றபோது நீங்கள் இருந்ததாகக் காட்டி, ஒரு இயைபு படுத்தியிருப்பது தவறு உரிமை மீறல் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது தொடர்பான செய்தியை நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். தொலைக் காட்சி துறையினருக்கு எழுதிக்கேட்டு தீர்ப்பு வழங்குவதாகச் சொல்லியிருக்கிறேன். ஆனால் நீங்கள் சொன்ன ** என்பது இந்த உரிமை மீறல் பிரச்சினைக்குத் தொடர்பற்ற ஒரு தொடர் என்ற காரணத்தினால் தான் நீக்குகிறேன். அது தொடர்பான பிரச்சினையை எடுத்துக் கொள்கின்ற போது நீங்கள் சொல்கின்றபோது அதற்குத் தகுந்த முறையில் இந்த அவை உங்களுடைய உரிமைக்குப் பாதகம் இல்லாத வகையில் வாய்ப்பளிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: நான் சொல்வதையே நீங்கள் அனுமதிக்கவில்லை என்று சொன்னால், நீங்கள் அதிலே ஏதோ சம்பந்தம் இருபபது போன்ற வெளியிலே ஒரு தோற்றம் வரும். நான் என்னுடைய (குறுக்கீடு). . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபோன்ற தவறான முயற்சியில் ஈடுபட மாட்டீர்கள் என்று கருதுகிறேன். ஏற்கனவே இது தொடர்பாக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை உங்கள் கட்சி கொடுத்திருக்கிறது. இது தொடர்பாக ஒத்திவைப்புத் தீர்மானம கொடுத்த உங்கள் கட்சியைச் சார்ந்த திரு. உகம்சந்த் அவர்களுக்கு விடை சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விடையைப் பொறுத்து நீங்கள் அப்போது விவாதிக்கின்றபோது உங்களுடைய முழுக் கருத்தையும் தெரிவிப்பதற்குக் கண்டிப்பாக இந்தச் சட்ட மன்றத்திலே வாய்ப்பு உண்டு. உங்களுடைய முழு ஆற்றலையும் நீங்கள் அப்போது வெளியிட்டுக் கொள்ளலாம். இப்போது அல்ல.

4. தகவல் கோரல்

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் அளிக்க வேண்டியது குறித்து.

திரு .மா. சுந்தரதாஸ்: பல ஆண்டுகளாக இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எந்த கார்டும் கொடுக்காமல் இப்போது இந்த அரசு கிராமங்களில். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1990 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இது பொதுவான பிரச்சினை. நீங்கள் பேசும் போது உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசிக்கொள்ளலாம். அல்லது வேறு ஏதாவது தீர்மானம் கொடுத்தால் அது தொடர்பாக விடை சொல்வேன்.

5. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 9 (1)—ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத்தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

1. திரு. அ. லெ. சுப்பிரமணியன்
2. திரு. பெ. சு. திருவேங்கடம்
3. திரு. இரா. மோகன்
4. திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
5. திரு. குமரி அனந்தன்
6. திரு. உ. ரா. வரதராசன்.

திரு. மா. சுந்தரதாஸ்: ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு மா. சுந்தரதாஸ் அவர்கள் பேசியது அவைக் குறிப்பில் இடம் பெறாது.

6. வரவு-செலவுத் திட்டம், 1990-91—பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1990-91 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். திரு. உகம்சந்த் அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

[10-10 மணி]

*திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துவைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற நேரத்தில், மக்களுக்கு செய்ய வேண்டிய சமூக நல, பல்வேறு உதவிகளை வழங்குகின்ற திட்டங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால், அப்படிப்பட்ட திட்டங்கள் ஏதும் இல்லை ஏதோ கணக்கு வாத்தியார் கணக்குப் போடுவதுபோல, அவர்கள் போட்ட கணக்கில், இவ்வளவு வருவாய், இவ்வளவு செலவு, இது ஒரு பற்றாக்குறை என்கிற அடிப்படையில் ஒரு கணக்குக் குறிப்பு, ஆக இந்த பட்ஜெட் இருக்கிறது. மக்களுக்குப் பயனளிக்கின்ற எந்த ஒரு நல்ல திட்டமும் இதிலே அறிவிக்கப்படவில்லை. அதைப்போல, இந்தப்

** மாண்புமிகுபேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.